# சென்னை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள், சென்னை-08

ந.க.எண் 5980/ஆ2/2022, நாள். 25.08.2022

பொருள் : தமிழ் வளர்ச்சித் துறை 2021-2022 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்பு -நாட்டிற்காகப் பாடுபட்ட தலைவர்களின் பிறந்த நாளன்று மாவட்ட அளவில் பள்ளி மாணவர்களுக்குப் பேச்சுப் போட்டிகள் ஆண்டுதோறும் நடத்தி பரிசுகள் வழங்குதல் – அவ்வகையில் பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார் ஆகியோர் பிறந்த நாளான 15.09.2022 மற்றும் 17.09.2022 ஆகிய நாட்களில் சென்னை மாவட்டத்தில் மாவட்ட அளவில் பேச்சுப் போட்டிகள் நடத்தி பரிசுகள் பாராட்டுச் சான்றிதழ் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை 1. சென்னை-08, தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் அவர்களின் கடிதம் எண் 8465/ஆ.மொ.4/2022, நாள் 18.08.2022

..........

மேற்காண் பொருள் சார்ந்து பார்வையில் காணும் சென்னை-08, தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் அவர்களின் செயல்முறைகளுக்கு இணங்க தமிழ் வளர்ச்சித் துறையின் 2021-2022 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்பிற்கிணங்க நாட்டிற்காகப் பாடுபட்ட தலைவர்களான மகாத்மா காந்தி, ஜவஹர்லால் நேரு, அண்ணல் அம்பேத்கர், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழர் கலைஞர் ஆகியோரின் கருத்துக்களையும் சமூகச் சிந்தனைகளையும் இளைய தலைமுறையினரிடம் கொண்டுசேர்க்கும் வண்ணம் ஆண்டுதோறும் அவர்களது பிறந்த நாளன்று மாவட்ட அளவில் பள்ளி மாணவர்களுக்குப் பேச்சுப் போட்டிகள் நடத்திப் பரிசு, பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்பட அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் பேச்சுப் போட்டிகள் நடத்தி பரிசுத் தொகையும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பெற்றன.

இவ்வகையில் 2022- 2023 ஆண்டிற்கு மாவட்ட அளவில் பள்ளி மாணவர்களுக்கு அனைத்து மாவட்டங்களிலும் பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார் ஆகியோர் பிறந்த நாளான 15.09.2022 மற்றும் 17.09.2022 ஆகிய நாட்களில் அன்னார்களின் பிறந்த நாளையொட்டி பள்ளி மாணவர்களுக்கான பேச்சுப் போட்டிகள் நடைபெறவுள்ளன. .

எனவே, இப்பேச்சுப்போட்டி பள்ளியளவில் 6 முதல் 12 ஆம் வகுப்பு முடிய பயிலும் மாணவர்களுக்கு நடத்தி முடிக்கப்பட்டு ஒரு பள்ளிக்கு இரண்டு மாணவர்கள் வீதம் மாவட்ட அளவில் நடைபெறும் போட்டிக்கு அனுப்பப்படவேண்டும். மேற்காண் நாட்களில் மாவட்ட அளவில் நடைபெறவுள்ள இப்போட்டியில் கலந்துக்கொள்ள தலைமை ஆசிரியர்கள் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும். மேலும், இப்போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு முதல் பரிசு ரூ.5000/-மும் இரண்டாம் பரிசு ரூ.3000/– மும் மூன்றாம் பரிசு ரூ.2000/– மும் வழங்கப்பெறும். மேலும், இப்போட்டியில் பங்கேற்று வெற்றி பெறும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு சிறப்பு பரிசு ரூ.2000/– வீதம் இரண்டு பேருக்கும் மற்றும் சான்றிதழும் வழங்கப்பெறும்.

வருவாய் மாவட்ட அளவில் கீழ்க்கண்ட கல்வி மாவட்டங்கள் அதற்க்கெதிரே குறிப்பிடப்பட்ட கல்வி மாவட்டத்தில் பேச்சுப்போட்டிகள் நடைபெறும் என தெரிவிக்கப்படுகிறது. .

1. மேற்கு சென்னை மாவட்டத்தின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட பெயர் பட்டியல்கள் - மத்திய சென்னை மாவட்டக் கல்வி அலுவலகத்திற்கும்,
2. கிழக்கு சென்னை மாவட்டத்தின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட பெயர் பட்டியல்கள் - தென் சென்னை மாவட்டக் கல்வி அலுவலகத்தற்கும்,
3. வட சென்னை மாவட்டத்தின் சார்பில் தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்களின் பெயர் பட்டியல்களை அதே மாவட்டத்திலும் ஒப்படைக்கப்படவேண்டும்.

மேற்காண் விவரப்படி உள்ள கல்வி மாவட்டங்களில் கீழ்க்காண் மையங்களில் இறுதிப்போட்டிகள் நடைபெறும் என அனைத்துப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

| வ. எண். | இறுதிப் போட்டி நடைபெறும் மையங்கள் | போட்டி நடைபெறும் பள்ளிகள் விவரம் | தலைமை ஆசிரியர் / மைய ஒருங்கிணைப்பாளர் விவரம்/ அலைபேசி எண். |
|---|---|---|---|
| 1 | மத்திய சென்னை கல்வி மாவட்டம். | ஜெய்கோபால் கரோடியா அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, சைதாப்பேட்டை, சென்னை – 15. | தலைமை ஆசிரியர் 9445692342 |
| 2 | தென் சென்னை கல்வி மாவட்டம் | அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, அசோக் நகர், சென்னை – 83 | தலைமை ஆசிரியர் 7373008858 9841134319 |
| 3 | வட சென்னை கல்வி மாவட்டம் | அரசு உயர்நிலைப் பள்ளி, வில்லிவாக்கம், சென்னை – 49. | தலைமை ஆசிரியர் 9841076721 |

| வ. எண். | பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் பேச்சுப்போட்டி நடைபெறும் நாள் | 15.09.2022 | | தந்தை பெரியார் பிறந்த நாள் பேச்சுப்போட்டி நடைபெறும் நாள் | 17.09.2022 |
|---|---|---|---|---|---|
| | தலைப்புகள் | | | தலைப்புகள் | |
| 1 | தாய் மண்ணிற்குப் பெயர் சூட்டிய தநயன் | | 1 | தொண்டு செய்து பழுத்த பழம் | |
| 2 | மாணவர்க்கு அண்ணா | | 2 | தந்தை பெரியாரும் தமிழ்ச் சமுதாயமும் | |
| 3 | அண்ணாவின் மேடைத் தமிழ் | | 3 | தந்தை பெரியாரின் பகுத்தறிவுச் சிந்தனைகள் | |
| 4 | அண்ணா வழியில் அயராது உழைப்போம் | | 4 | தந்தை பெரியார் காண விரும்பிய உலக சமுதாயமும் | |
| | | | 5 | தந்தை பெரியாரும் பெண் விடுதலையும் | |

எனவே, மேற்காணும் தலைப்புனை மாவட்டத்திலுள்ள அனைத்து வகை அரசு / அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகளில் பயிலும் மாணவர்களில் ஒரு பள்ளிக்கு இரு மாணவர்கள் வீதம் கலந்து கொள்ளும் வகையில் மாணவர்கள் பெருமளவில் பங்கேற்கும் வகையில் செயல்படுமாறு அனைத்து பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

முதன்மைக்கல்விஅலுவலர்
சென்னை-08

பெறுநர்

1. அனைத்துமாவட்டக்கல்விஅலுவலர்கள், சென்னைமாவட்டம்
2. அனைத்து வகைப் பள்ளித்தலைமையாசிரியர்கள் / பள்ளி முதல்வர்கள், அரசு/ சென்னை/ஆதிந/அரசு உதவிபெறும் / மெட்ரிக் உயர் / மேல்நிலைப் பள்ளி உயர்நிலை/மேல்நிலைப்பள்ளிகள்சென்னைமாவட்டம்

நகல்

1. சென்னை-08, தமிழ்வளர்ச்சிஇயக்குநர்அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது
2. கல்விஅலுவலர், சென்னை மாநகராட்சி அவர்களுக்கு தொடர்நடவடிக்கைக்காக கனிவுடன் அனுப்பப்படுகிறது.